# இலங்கையில் பல்கலைக் கழகக் கல்வி இன்றைய காலகட்டத்தில் முகங்கொடுக்கவேண்டிய சில பிரச்சினைகள்

சுசிலா அருளானந்தம்

பல்கலைக் கழகம் என்பது, பாரம்பரிய நோக்கில், விதிக்கப்படுகின்ற பாடநெறிகளை அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் பயிற்சி நெறிகளைத் தழுவிய தேர்வுகளின் முடிவாக, பட்டங்களையும், சான்றிதழ்களையும் வழங்கும் நிறுவனம் என விளக்கம் பெற்றது. அறிவியல் அரங்கில் இடம் பெறும் துறைகள் அனைத்தையுமோ அன்றி அவற்றுட் குறிப்பிட்ட சிலவற்றையோ தான் அளிக்கும் பாடநெறிகளுள் அடக்கும் உரிமையினை அது பெற்றிருந்தது. அங்கு கடமை புரிந்த ஆசிரியர்கள். எவரது கட்டுப்பாட்டுக்கும் உட்படாது, தத்தம் துறைகளில் தமது கருத்துக்களை எடுத்தியம்பவும், வளர்க்கவும் உரிமை உடையவர்களாகக் கருதப்பட்டார்கள். கலை பயில்வோன் தனக்கு இயைந்த கலைத்துறை இதுவெனத் தெரிந்து அத்துறையில் நிரம்பிய புலமை பெறும் இடமாகப் பல்கலைக் கழகம் இயங்கியது. இவற்றுக்கெல்லாம் அடிப்படையான அறிவியற் சுதந்திரம் பல்கலைக் கழகக் கல்வியின் சிறப்பம்சமாகக் கொள்ளப்பட்டது.

ஆரம்பத்தில் அறிவு வளர்ச்சிக்குப் பிரத்தியேக இடத்தைக் கொடுத்த பல்கலைக் கழகக் கல்வி, தானளிக்கும் கல்வியின் பயன்பாட்டு நோக்கினையும் கருத்திற் கொள்ளும் நிலை உருவாகியது. பல்கலைக் கழகக் கல்வி, அறிவு நோக்குடையதாக இருக்கவேண்டுமா அல்லது பயன்பாட்டு நோக்குடையதாக இருக்கவேண்டுமா என்ற சர்ச்சை எழ அதிக காலம் எடுக்கவில்லை. பல்கலைக் கழகக் கல்வியின் வரலாற்றில் இக்கருத்துபேதம் அண்மைக் காலத்தில் தோன்றியதல்ல. பத்தொன்பதாம் நூற்றுண்டிலேயே அது உருப்பெறத் தொடங்கிவிட்டது. பல்கலைக் கழகக் கல்வி, அறிவு நோக்கத்திற்கே சிறப்பிடம் வழங்கவேண்டும் என்று கார்டினல் நியூமன்[1] கருத்துத் தெரிவித்த அந்த நாட்களிலிருந்து இன்றுவரை அக்கல்வி என்ன திசையில் நோக்கவேண்டும், என்ன கடமைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற சிந்தனைகள் அதன் செயற்பாட்டினை நெறிப்படுத்தியுள்ளன. எனினும், அச்செயற்பாடு பற்றிய நோக்குகள் இன்றைய சமூகச் சூழலுக்குப் பொருத்தமானவையாக அமையவேண்டும் என்ற அழுத்தம் இன்று வலுப்பெற்றுவிட்டது. அதன் விளைவாகப் பல நூற்றுண்டுகளுக்கூடாக வளர்ச்சியடைந்த பல்கலைக் கழகத்தின் வரலாற்றில் இன்றைய காலகட்டம் சோதனைக் காலமாக அமைந்துவிட்டதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.[2]

சமூகத்திற்குத் தேவையான பட்டதாரிகளை உருவாக்கி, அதன் பொருளியல் – சமூக – பண்பாட்டு விருத்தியை உறுதிப்படுத்தும் கடமையினைப் பல்கலைக் கழகம் பெறுகின்றது. புதிய அறிவுத் துறைகளைப் பரப்பும் அதே வேளையில், பழைய எண்ணக்கருக்களை முற்றுகப் புறக்கணித்து

விடாமல் அவற்றுக்கும் புதியவற்றுக்கும் இடையே சமநிலையைக் காண வேண்டிய நிலைக்குப் பல்கலைக் கழகங்களும் அவற்றில் பயிலும் மாணவர் களும் இன்று வந்துவிட்டமை கண்கூடு. இன்றைய நிலை, தேவைகள் என்பனவற்றை மட்டும் கருதாது எதிர்காலத்தையும் நோக்கிச் செயற் படும் இயல்பினை அவற்றிடமிருந்து எதிர்பார்க்கும் உரிமை மக்களுக்குண்டு. சமூகத்துக்குத் தேவையான பயிற்சிகளையும் நெறிகளையும் வளர்ப்பதோடு சமுதாய முன்னேற்றத்தின் உயிரோட்டமான சிந்தனைகளையும் செயல்களை யும் பரப்பிச் செறியச் செய்வது பல்கலைக் கழகங்களின் பொறுப்பு என்ற எண்ணம் இன்று வலுவடைந்துள்ளது. இக்கண்ணோட்டம் வளர்ச்சி யடைந்த சமூகங்களில் பெறும் தாக்கத்திலும் வளர்ந்துவரும் சமூகங்களில் கூடிய அழுத்தம் பெறுகின்றது. மேற்கத்தைய மாதிரிகளைப் பின்பற்றி அமைக்கப்பட்ட பல்கலைக் கழகங்கள், விசேடமாக மூன்றும் மண்டல அமைப்பின் பின்னணியில் தாம் இயங்கும் கால – நேர – சூழலுக்குப் பொருத்தப்பாட்டுடன் இயங்கவேண்டியதன் நிமித்தம் பல பிரச்சினை களை எதிர்நோக்குகின்றன.[3]

இந்தப் பின்னணியில், எமது நாட்டின் பல்கலைக் கழகக் கல்வியில் செறிந்துள்ள சில பிரச்சினைகளை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## வளர்ச்சிப் பின்னணி

இலங்கையின் முழுமையான உயர்கல்வித் தேவையை நிரப்பும் பொருட்டு அன்று செயற்பட்டுவந்த இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரி யையும் இலங்கை மருத்துவக் கல்லூரியையும் இணைத்து 1942இல் இயற் றப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டளைச்சட்டம் இலங்கையின் முதற் பல்கலைக் கழகத்தின் தோற்றத்திற்கு அடியிட்டது. அன்று தொடங்கிய பல்கலைக் கழக நிறுவன அமைப்பு இன்று கொழும்பு, களனி, பேராதனை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, மொறட்டுவ, யாழ்ப்பாணம், உருகுணை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் முழுமையான பல்கலைக் கழகங்களாக வும், பொல்கொல்லவில் பல்கலைக் கழக வளாகமாகவும் பெருகியுள்ளது. அத்துடன், 1980இல் ஆரம்பிக்கப்பட்ட திறந்தவெளிப் பல்கலைக் கழகம் நாட்டின் பல்கலைக் கழகக் கல்விக்குப் புதிய பரிணாமத்தை அளித்துள்ளது.

நமது நாட்டின் பல்கலைக் கழகக் கல்வி வரலாறு அரை நூற்றாண்டு அகவையினை அண்மித்துக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் அதன் பெருக்கத்தைப் பின்னோக்கிப் பார்க்கும்போது, பல சுவையான தகவல்களை அவதானிக்கலாம். அப்பாதையில் ஏற்பட்ட மாற்றம் ஒவ் வொன்றும், அந்தந்தக் காலத்தில் ஏற்பட்ட தேவைகளை நிறைவு செய் யும் பொருட்டும் இடம்பெற்றது என்பதைக் காணலாம்.

## அனுமதி முறை

காலத்துக்குக் காலம் நாட்டில் ஏற்பட்ட சமூகத் தேவைகள், கோரிக்கை களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் எமது பல்கலைக் கழகங்களின் எண்

ணிக்கை பெருகியிருப்பினும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் தொகையை நோக்குமிடத்து எவரும் மகிழ்ச்சியடைய முடியாது. எமது இடைநிலைக் கல்வி மட்டத்தில் ஏற்பட்டுள்ள விரிவாக்கத்துடனும், பல்கலைக் கழகக் கல்வியை நாடுவோரின் தொகையுடனும், பல்கலைக் கழகங்களில் அனுமதிக் கப்படுவோரின் தொகையினைத் தொடர்புபடுத்திப் பார்த்தால், பல்கலைக் கழக அனுமதி மட்டத்தில் பாரதூரமான 'மறியல்' போடப்படுகின்றது என்ற எண்ணம் எழுவதைத் தவிர்க்க முடியாது. கீழ்க்காணும் தரவுகள் இக்கருத்தை மெய்ப்பிக்கின்றன:-

| அனுமதி ஆண்டு | அனுமதித் தகுதியுடையோர் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்டோர் எண்ணிக்கை | அனுமதி வீதம் |
|---|---|---|---|
| 1979 / 80 | 26,918 | 4,959 | 18.42 |
| 1980 / 81 | 29,698 | 4,857 | 16.35 |
| 1981 / 82 | 40,236 | 5,004 | 12.43 |
| 1982 / 83 | 32,409 | 5,328 | 16.44 |
| 1983 / 84 | 26,768 | 5,463 | 20.41 |
| 1984 / 85 | 17,839 | 5,630 | 31.56 |
| 1985 / 86 | 16,041 | 5,426 | 33.83 |

Source : U. G. C., Second Annual Report, 1980, p. 53.
U. G. C., Third Annual Report, 1981, p. 30.
U. G. C., Division of Planning & Research, Statistical Handbook, 1984, p. 29.
U. G. C., Division of Planning & Research, Statistical Handbook, 1985, p. 27.

இச்சந்தர்ப்பத்தில் 1963ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் உயர்கல்வி ஆணைக்குழுவின் தலைவராகவிருந்த, றொபின்ஸ் பிரபு வெளியிட்ட கருத்து குறிப்பிடத்தக்கது. ''தரமுள்ள, விருப்பமுள்ள அனைவர்க்கும் உயர்கல்வி அளிக்கப்படவேண்டும். போட்டி நிலையில் பல்கலைக் கழக அனுமதி வழங் குதல் கூடாது. உயர்கல்வி பெறத் தகுதியுள்ளவர்கள் மிகக் குறைந்த சத விதத்தினரே எனும் நிலையை மாற்றி, கல்வியில் சமசாதனை நிலை நாட்டியவர்கள் அனைவர்க்கும் சமகல்விப் பரிசுகளை வழங்க வேண்டும்'' என்பது அக்கருத்தாகும்.[4]

கல்வித் தரத்தில் சமநிலையில் உள்ளவர்களுக்குக் கல்வி வாய்ப்புகளை வழங்கத் தவறுவது ஐ. நா. மனித உரிமைப் பிரகடனத்தையே மறுப்ப தாகும். "ஒவ்வொருவருக்கும் கல்விபெற உரிமை உண்டு. ஆரம்ப, அடிப்படை மட்டங்களிலேனும் கல்வி இலவசமாயிருத்தல் வேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயமானதாக இருத்தல் வேண்டும். தொழில் நுட் பக் கல்வியும், தொழில்துறைக் கல்வியும் சாதாரணமாகக் கிடைக்கக் கூடியதாக வேண்டும். அதேபோல உயர்கல்வியும் தரத்தின் அடிப்படை யில் எல்லோர்க்கும் பெறக்கூடியதாக இருத்தல்வேண்டும்.''[5] என்ற கருத் துக்கு மதிப்பளிக்கும் வகையில் எமது பல்கலைக் கழக அனுமதி முறைகள் இருக்கின்றனவா எனச் சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகும்.

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்ப்பின், ஆரம்ப காலத்திலிருந்து பல்கலைக் கழக அனுமதி தரத்தின் அடிப்படையிலேயே இடம்பெற்றது என்பதை அவதானிக்கலாம்.[6] அன்று பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களைப் பல்கலைக் கழகமே தெரிந்தெடுக்கும் உரிமை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 1966இல் நிறைவேற்றப்பட்ட உயர்கல்வித் தேசியச் சபைச் (இல. 20) சட்டத்தின் பின்னர் அதில் உருப்பெற்ற மந்திய நிலையம் உயர்கல்வி தொடர்பான அலுவல்கள் யாவற்றையும் கவனிக்கும் முறையில் மாணவர் அனுமதியும் அதன் அதிகார எல்லைக்குள் அடங்கியது. பல பல்கலைக் கழகங்கள், ஒரு தெரிவுத் தேர்வு என்ற நிலையில் தெரிவு சம்பந்தமான நடைமுறைகளைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை மறுக்க முடியாதெனினும், பல்கலைக் கழகங்களின் கட்டுப்பாட்டு எல்லையிலிருந்து அனுமதி அதிகாரத்தைப் பிரித்தெடுத்தமை அதில் பல்வேறு பிரச்சினைகளும் தலையீடுகளும் குறுக்கிட வழிவகுத்தது.

அரசியல் இலக்குகள் பல்கலைக் கழகத் தெரிவு முறைகளில் புகுந்து கொண்டமை எமது நாட்டின் கல்வி – சமூக – அரசியல் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள் இன்றும் மறக்க முடியாதவையாக விளங்குகின்றன. தரப்படுத்தலில் ஆரம்பித்து, விதாசார முறையாக மாற்றம் பெற்றுள்ள அனுமதி முறை கல்வி உலகைத் திருப்திப்படுத்தியுள்ளதென்று கூற முடியாது.[7] அனுமதி கோரும் மாணவ தொகையின் பெருக்கத்திற்கேற்ற அளவில் பல்கலைக் கழகங்களில் இடவசதியில்லாமை தற்காலிகமான அணுகுமுறைகளை நாடவைத்தாலும் கல்வியின் தரத்தைப் பொறுத்த வரை அவற்றை நிரந்தரமானவையாக ஏற்றுக்கொள்ள முடியாது. வசதி குறைந்த பகுதிகளில் கற்கும் மாணவர்களுக்கு உதவவேண்டியது தேவையென்றாலும், அதன் பெயரில் கல்வித்தரத்தைப் புறக்கணிக்கலாமா என்ற வினாவுக்கு விரைவில் விடை காணப்படத்தான் வேண்டும்.

இன்று நடைமுறையிலுள்ள, பின்தங்கிய மாவட்டங்களுக்கான 15 சதவித அனுமதி ஒதுக்கீடு தொடர்ந்தும் கையாளப்படும் போதும் திறமையான நகர்ப்புற மாணவர்களைக் காரணமின்றிக் கஷ்டப்படுத்துவதாகும் தகைமை குறைந்த, பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த, மாணவர்களைப் பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளுக்கு அனுமதிப்பதிலும், அப் பகுதிகளின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கேற்ற பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்கும் வண்ணம், தகுதியான துறைகளுக்கு அவர்களை அனுமதித்து, பட்டதாரிகளை உருவாக்க முயற்சி செய்தால் அப்பகுதி மாணவர்களாலேயே அவ்வப் பகுதிகள் முன்னேற்றமடைய வாய்ப்புண்டாகும். அத்துடன் திறமையிருந்தும் விதாசார முறையின்கீழ்ப் பாதிக்கப்படும் நகர்ப்புற மாணவர்களும் விமோசனமடைவர். பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மாவட்ட அடிப்படையிலான பங்கு ஒரு தற்காலிக முறையே என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.[8] அகில உலக ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய திறமையடிப்படையிலான தெரிவு முறையே இடம்பெறவேண்டும். அதே நேரம் பல்கலைக் கழகக் கல்வியை வேண்டி நிற்கும் அனைவர்க்கும் இடம் கொடுக்கும் வகையில் பல்கலைக் கழகங்களில் இடவசதி அதிகரிக்கப்படவும் வேண்டும். அது முடியாதவிடத்துப் புதிய பல்கலைக் கழகங்கள் திறக்கப்படுவதையொட்டிச் சிந்திக்க வேண்டும்.

பல்கலைக் கழகங்களுக்கான அனுமதி முறையோடு தொடர்புடைய இன்னொரு பிரச்சினை மாணவரைத் தெரிந்தெடுப்பதற்குப் பயன்படும் தேர்வாகும். இன்று பல்கலைக் கழக அனுமதித் தேர்வாக அமையும் க. பொ. த. (உ. நி.) தேர்வானது அடைவுகளை அளவிடும் ஓர் அடிப்படைத் தேர்வாகவே உள்ளது. மாணவர்களுடைய எதிர்கால முன்னேற்றத்துக்கு வேண்டிய மனப்பாங்குகள், திறன்கள் என்பனவற்றை அறிந்து கொள்ள உதவுவதாக இது அமையவில்லை. அடைவுத் தேர்வில் உயர் புள்ளிகளைப் பெறுவது மட்டும் போதாது. அனுமதிக்கப்படும் குறிப்பிட்ட துறைகளுக்குப் பொருத்தமானவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

வெறுமனே அடைவுத் தேர்வின் அடிப்படையில் பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும்போது, அதனையே இலக்காகக் கொண்டு செயற்படும் பள்ளிக்கூடங்களும் பிரத்தியேகக் கல்வி நிலையங்களும் மாணவர்களின் நிறைவான வளர்ச்சியில் கரிசனை காட்டுவது இல்லை. பரீட்சையில் போட்டியையும், வெற்றியையும் உறுதிப்படுத்தும் வகையில் மட்டுமே அவை செயற்படுகின்றன. அதன் விளைவு நாட்டின் நலனுக்கும் அபிவிருத்திக்கும் பயன்படவேண்டிய கல்வியின் நோக்கம் நிறைவு பெறுமையாகும். திறமையுடைய மாணவனைப் பொருத்தமான கற்கைநெறிக்கு வழிப்படுத்துவதன்மூலம் நாட்டின் வளத்தினை அதிகூடுதலான பயன்பாட்டு நிலைக்கு முதலீடு செய்வது உறுதிப்படுத்தப்படும். இதற்கு உதவும் முகமாக, ஏற்கெனவே நடைமுறையிலிருக்கும் க. பொ. த. (உ. நி.) தேர்வுடன், மேலதிகமாக தகுதிகாண் தேர்வு ஒன்று, மனப்பாங்குகளை இனங்காணும் தேர்வாகப் புகுத்தப்படலாம். இதன் மூலம் பல்கலைக் கழக அனுமதி முறையில் எதிர்ப்படும் 'சிக்கலான' நிலைமைகளையும் தீர்த்து வைக்கலாம்.

## சமூக இணைவு

''பல்கலைக் கழகம் ஒரு நாட்டின் உயிர்நாடி'' என்பது அறிவியல் மேதை அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் கூற்று.[9] இக்கூற்று உண்மையானதாக வேண்டுமானால் பல்கலைக் கழகமானது தான் எந்தச் சமூகத்தின் மத்தியில் செயற்படுகிறதோ அதனுடன் பொருத்தப்பாடுடையதாக இருத்தல் வேண்டும். சான்றிதழுக்காகக் கல்வி என்ற நிலை மாறி சமூக மாற்றம், சமூகப் பற்று, சமூக உணர்ச்சி என்பன பல்கலைக் கழகத்தின் செயற்பாட்டில் காணப்பட வேண்டும். பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் புற உலகை மறந்து 'தந்தக் கோபுரங்களில் சஞ்சரித்த' காலம் கடந்துவிட்டது. இன்று எம்மைச் சுற்றியுள்ள மக்கள் கூட்டத்தையும், அவர்களுடைய எண்ணங்கள், விருப்புக்கள், வெறுப்புக்கள் ஆகியவற்றையும் பொருட்படுத்தாது பல்கலைக் கழகப் புத்திஜீவிகள் வாழ்க்கை நடத்த முடியாது. மூன்றும் மண்டல நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்கள் இந்நிலையிலிருந்து விலகி நிற்க முடியாது என்பது வற்புறுத்தப்பட்டுள்ளது.[10]

எம்மை அரவணைக்கும் சமூகத்தின் தேவைகளை அறிந்து, உணர்ந்து, அவற்றுக்கு நாமும் முகங்கொடுக்கத்தான் வேண்டும். அமெரிக்க ஐக்கிய அரசு, சோவியத் ஒன்றியம், யப்பான், ஜேர்மனி, டென்மார்க் போன்ற நாடுகளில் சமூக மாற்றத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் பல்கலைக் கழகச்

செயற்பாடுகள் நெகிழ்ச்சியுடையவையாகக் காணப்படுதல் நோக்கத் தக்கது. எமது அயல்நாடாகிய இந்தியாவில் பின்பற்றப்படும் கிராமிய உயர் கல்வி என்ற தத்துவம் இத்தொடர்பில் கருத்திற்கொள்ளத் தக்கது. கிராமியக் கல்வி, பொருளாதார – சமூகநல - பண்பாட்டு – நாட்டு விருத்தி என்னும் இலக்குகளை உடையதாக விளங்குகின்றது. மகாத்மாகாந்தி காண விழைந்த கிராம இராச்சியத்தின் நுழைவாயிலாக கிராமிய உயர் கல்வி நிறுவனங்கள் அங்கே தொழிற்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடக் கூடிய ஒன்று மதுரையிலுள்ள காந்தி கிராம பல்கலைக் கழகம். இவ்வாறான முன்மாதிரிகளிலிருந்து படிக்கவேண்டிய படிப்பினைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. எமது பல்கலைக் கழகங்களில் நடைமுறைப் படுத்தப்படும் புத்தாக்கங்களும். கலைத்திட்டங்களும், பயிற்சிகளும் சமூகத்தின் தேவைகளைப் பிரதிபலித்து, பல்கலைக் கழகம் அதன் சூழலிலிருந்து ஊட்டத்தினையும், உத்வேகத்தினையும் பெறும்போதுதான் அதன் செயற்பாடு அர்த்தமுள்ளதாக அமையும்.[11]

## கற்கை நெறிகள்

ஒரு பல்கலைக் கழகம் அது இயங்கும் சமூகத்தோடு பொருத்தப்பாடுடையதாக விளங்குவதில் அதன் கற்கை நெறிகள் காத்திரம் பெறுகின்றன. பல்கலைக் கழகக் கலைத்திட்டத்தில் சமூகநலம் கொண்ட மக்கட் பண்புக் கலைகள், சமூகவியற் கலைகள், விஞ்ஞானம், தொழினுட்பம் போன்ற நெறிகள் யாவும் தத்தமக்குரிய பங்கினைப் பெறக்கூடிய வகையில் நன்கு திட்டமிடப்படல் வேண்டும். ஒரு வளர்முக நாட்டின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, தனிக் கலைப் பாடங்களையோ அல்லது தனி விஞ்ஞானப் பாடங்களையோ கற்பிப்பதைவிட்டு அவற்றுக்கிடையே இணைப்பைக் காண முற்படவேண்டும். இன்றைய வழக்கில் இவ்விணைப்பு முயற்சிகள் ஓரளவுக்கேனும் இடம் பெறுதல் வரவேற்கத் தக்கதாயினும், அது போதுமானதாகக் கொள்ள முடியாது. கல்வி வளர்ச்சியில் கலையம்சம். தொழிலம்சம் ஆகிய இரண்டும் முழுமையாக இணையும்போதே நாட்டின் அபிவிருத்தி உறுதிபெறும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இயற்கை வளங்களைச் சிறந்த வழியிற் பிரயோசனப்படுத்தி, நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்குவதற்கு வேண்டிய அறிவைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கலைத்திட்டம் அமைதல் வேண்டும். இதற்கு வாழ்க்கைப் பயன்பாடுடைய தொழில் நோக்குக் கற்கை நெறிகள் பெரிதும் உதவும் இவ்வழக்கு இன்று உலகில் பரவலாகக் காணப்படுவதுண்டு. பல்கலைக் கழகக் கல்விக்கு மாதிரி அமைப்பாக நமது நாடு கொண்ட ஐக்கிய இராச்சியத்திலேயே இப்போக்கினைக் கவனிக்கலாம். அங்கே மன்செஸ்ரர், பேமிங்கம், லிவர்பூல், லீட்ஸ் ஆகிய பல்கலைக் கழகங்கள் கைத்தொழில், வர்த்தகக் கலைகளைப் பல்கலைக் கழகக் கற்கை நெறிகளுடன் இணைத்துள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளிலேயே இது உணரப்பட்டதாயின், வளர்முக நாடாகிய நாம் விதிவிலக்காக முடியுமா? ஒரு காலகட்டத்தில் இத்திசையில் அடியெடுத்து வைக்க முயன்ற நாம் இன்று தயங்க வேண்டிய தேவை என்ன? 1972ஆம் ஆண்டு 1ஆம் இலக்கப் பல்கலைக் கழகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஒரே பல்கலைக்

கழகம் - பல வளாகங்கள் என்ற அமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர், ஒஸ்மன்ட் ஜெயரத்ன குழுவின் விதப்புரைகளைத் தொடர்ந்து கலைத் திட்டத்தில் புதிய அம்சமாகத் தொழில் நோக்குக் கற்கை நெறிகள் புகுத்தப்பட்டன. அவ்வாரம்பம் மிகவும் முன்னேற்றகரமான ஒன்றாக இருந்தாலும், அது யதார்த்த நிலையில் தொடரப்படாமை நாட்டின் துரதிஷ்டமேயாகும். பல்கலைக் கழகக் கல்வி வெறும் நூல்சார் கல்வியாக இருந்தாற் போதுமா? வாழ்வுப் பயன் நோக்கு அதில் இடம்பெற வேண்டாமா? என்ற கேள்விகள், உலகின் பல நாடுகளிலும் கேட்கப் படுபவை - எமக்கு முன்னும் எழத்தான் செய்கின்றன. அவற்றுக்கு முகங் கொடுக்காமல் முன்னேற முடியாது.

## போதனை மொழி

எமது பல்கலைக் கழகங்கள் எதிர்கொள்ள வேண்டிய பிறிதொரு பிரச்சினை போதனைமொழி சம்பந்தப்பட்டதாகும். தேசிய மொழிகள் கல்வி மொழிகளாக, அரசுக் கொள்கை அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட நாட்டில் இன்னமும் அதைப்பற்றிய பிரச்சினை காணப்படுவது விந்தையெனச் சிலர் கொண்டாலும், உண்மை நிலையை நாம் எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1951ஆம் ஆண்டிலிருந்து தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளின் விளைவாக, தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள்மூலம் கல்வி கற்ற மாணவர்கள் 1960இல் பல்கலைக் கழகத்தினுள் பிரவேசிக்கும் நிலை உண்டாயிற்று.[12] கலைத்துறையில் ஆரம்பித்த இந்த மாற்றம் 1967இல் ஏனைய துறைகளுக்கும் பரவியது.[13] இம்மாற்றங்களின் எதிரொலிகள் இன்னமும் ஓயவில்லை. எமது பல்கலைக் கழகங்கள் இன்றுவரை இம்மொழிமாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு நேரடியாக முகங்கொடுக்காமையே இதற்குக் காரணமாகும்.

அரசியல் அடிப்படையில் எடுக்கப்பட்ட மொழிமாற்றத் தீர்மானத்தை முழுமனதாக ஏற்காவிடின் அதைப் பல்கலைக் கழகம் எதிர்த்திருக்கலாம். அதனை எதிர்க்கவோ அன்றி நிராகரிக்கவோ இயலாத பல்கலைக் கழகங்கள் அத்தீர்மானத்தைச் செயற்படுத்துவதில் ஏனோதானோ என்று இருந்து விட்டன. அதற்கு வேண்டிய ஆளணித் தேவைகள், நூலகத் தேவைகள் என்பன நீண்டகால நோக்கில் திட்டமிடப்படவோ சிந்திக்கப்படவோ இல்லை. அதன் தாக்கத்தினை இன்றும் எமது கற்றல் / கற்பித்தல் முயற்சிகளில் காணலாம். தேசிய மொழிகளின் பயன்பாடு கேள்விக்குறியாகத் தோற்றமெடுத்துவிட்டது. சில துறைகளில் அவற்றுக்குப் பதிலாக ஆங்கிலத்தைப் புகுத்தவேண்டும் என்ற வளரும் கருத்தினையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலைமை ஒருபுறத்தில் அரசுக் கொள்கைக்கு முரணான ஒரு போக்கினையும், தாய்மொழிக் கல்வி என்ற கல்விக் கோட்பாட்டுக்கு முரண்பட்டதான ஒரு போக்கினையும் எடுத்துக்காட்டுகின்றது. இதில் பல்கலைக் கழகங்கள் தமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தல் அவசியமாகும்.

## ஆங்கில அறிவு

கல்வி மொழி மாற்றத்துடன் தொடர்புடையதாக எழுந்து இன்றும் வளர்ந்துவந்துள்ள ஒரு பிரச்சினை பல்கலைக் கழக மாணிவரிடையே உள்ள

ஆங்கில அறிவுத் தரத்தின் குறைபாடாகும். கல்வி மொழியில் ஏற்பட்ட மாற்றம் ஆங்கில அறிவில் வீழ்ச்சியேற்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது இயல்பே எனலாம். கல்வி மொழியாக இருந்தபோது ஆங்கில அறிவுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் அந்த மாற்றத்தின்பின் இல்லாத நிலையில் ஆங்கிலத்தைக் கற்பதில் கரிசனை குறைந்தது. அந்த நிலையைப் பரிசிலனை செய்யும்பொருட்டு நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு ஆங்கிலம் கற்பிப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியது.[14] இருந்தும் ஆங்கிலக் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளமையை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். பல்கலைக் கழக மட்டத்திலும் இக் குறைபாடு மாணவர்களுடைய கல்வி உயர்ச்சியினைப் பாதிப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.[15]

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டின் பேரில் பல்கலைக் கழகங்களில் நுழையும் மாணவர்களுடைய ஆங்கில அறிவினை உயர்த்துவதற்குப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. எனினும் அவை எதிர்பார்க்கப்பட்ட அளவு வெற்றியாக அமைந்தன எனக் கொள்ள முடியாது. ஆங்கில அறிவுத் தரத்தின் தேவை நூல்நிலையப் பயன்பாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தேசிய மொழிகளில் நூல்கள் பற்றுக்குறை ஆங்கில மொழியில் உயர் அறிவினை இன்றியமையாததாக்கியுள்ளது. இந்த அறைகூவலைப் பல்கலைக் கழகங்கள் என்ன வழியில் எதிர்கொள்ளுகின்றன என்பதிலேயே பல்கலைக் கழகக் கல்வியின் தரம் தங்கியுள்ளது.

## பல்கலைக் கழக ஆசிரியர்கள்

''பல்கலைக் கழகமானது கட்டடங்கள், நிதிகள், நூல்கள் மற்றும் ஏனைய வசதிகளைக் கொண்டிருந்தபோதும், அதன் மிகப் பெரிய சொத்து அங்குள்ள ஆசிரியர்களே ஆவர்''[16] என்ற கருத்து எமது நாட்டுப் பல்கலைக் கழகங்கள் தொடர்பாக ஆழ்ந்து நோக்கத்தக்கது. ஒரு பல்கலைக் கழகத்தின் பயன்படு திறன் அதன் ஆசிரியர்கள் வழங்கும் ஆதரவிலேயே தங்கியுள்ளது. அவர்களின் கல்விப் புலமை, ஆய்வுத் திறன், கற்பித்தற்றிறன் என்பன பல்கலைக் கழக ஆசிரியர்களின் தொழிலோடு பிணைந்தவையாகும்.

ஒரு பல்கலைக் கழக ஆசிரியருடைய தொழிற்றுறை வாழ்க்கை கற்பித்தல், ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் என வகுக்கப்படலாம். இவற்றுக்கு வேண்டிய அடிப்படைத் தகைமைகள் நியமன காலத்திலேயே உறுதிப்படுத்தப்பட்டாலும், அவர்களுடைய தகைமைகள் மேலும் சிறப்பதற்கு உயர்பயிற்சி வாய்ப்புக்கள் தேவைப்படுகின்றன. இவ்வாய்ப்புக்கள் எமது நாட்டில் அரிதாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றைத் தேடி வெளிநாடுகளுக்கு ஆசிரியர்களை அனுப்ப நேரிடுகின்றது. அவ்விதம் அனுப்புவதற்குத் தேவையான நிதிவளம் எமது பல்கலைக் கழகங்களுக்கு இல்லாத நிலையில் பிற நிதிபடைத்த நிறுவனங்களின் உதவியை நாடவேண்டியுள்ளது. அத்தகைய உதவியைப் பெற முடியாத ஆசிரியர்கள் பயிற்சிபெறாமலே காலங் கழிக்கும் அவலநிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இது எமது பல்கலைக் கழகங்களில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தினைப் பாதிக்கின்றது.

வெளிநாட்டுப் பயிற்சி என்ற விடயத்துடன் தொடர்புடைய இன்னொரு பிரச்சினை – வெளிநாட்டுத் தொழில்களைத் தேடி எமது பல்கலைக் கழகங்களைக் கைவிட்டுச் செல்லும் ஆசிரியர்களின் பெருக்கமாகும். புத்திஜீவிகளின் வெளியேற்றம் எந்த ஒரு சமுதாயத்தின் அடித்தளத்தையும் ஆட்டங்காணச் செய்துவிடும். பல்கலைக் கழகச் சமூகத்தை அது பாதிக்கக்கூடிய அளவினை மதிப்பிட முடியாது. எமது பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில் இப்பிரச்சினை இரண்டு வழிகளில் உருவெடுக்கின்றது.

1. உயர்பயிற்சி நாடி வெளிநாடுகளுக்குச் செல்வோர் அப்பயிற்சி முடிந்ததும் தமது பல்கலைக் கழகங்களுக்குத் திரும்பாமல் விடுதல்.

2. பல்கலைக் கழகங்களிலிருந்து கொண்டே வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளை நாடிப் போதல். இவை இரண்டுக்கும் அடிப்படைக் காரணிகள் பல்கலைக் கழக ஆசிரியர்களுடைய திருப்தியற்ற சேவை நிலைமைகளும் ஊதியப் பற்றுக்குறையுமேயாகும். இவற்றைச் சீர் செய்யமுடியாத எந்தப் பல்கலைக் கழகமும் திறம்படச் செயலாற்ற முடியாது.

ஒரு பல்கலைக் கழக ஆசிரியனுடைய தொழிலில் கற்பித்தல், ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் என்பன பிரதானமானவை என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. இவ்விரு அம்சங்களிலும் எமது பல்கலைக் கழகங்களிலுள்ள ஆசிரியர்கள் ஆராய்ச்சிப் பணியில் தமது பங்களிப்பினைச் செய்யவில்லை என்று குறைகூறப்படுவது வழக்கமாகிவிட்டது. இதற்குக் காரணமாக, பொருத்தமற்ற ஆசிரிய – மாணவ விகிதத்தைச் சுட்டிக்காட்டலாம். ஆசிரியர்மீது அதிகப்படியான போதனைப் பொறுப்பு, பரீட்சைக் கடமைகள் என்பன பெருகிவிட்டன. அது ஆய்வுக்குத் தேவையான நேர அவகாசத்தை இல்லாமலாக்கிவிடுகின்றது. அத்துடன் ஆய்வுகளைச் சிறந்த முறையில் மேற்கொள்ளுவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு இல்லாமையும் ஆய்வு முயற்சிகளில் இருக்கும் ஆர்வத்தை மழுங்கடித்து விடுகின்றது. இக்குறைபாடுகளை எதிர்கொள்ளாதவிடத்து எமது பல்கலைக் கழகங்கள் ஆய்வுத் துறையில் முன்னேறும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

### மாணவர்கள்

எமது பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்கள் தொடர்பாக எழும் சில பிரச்சினைகளுக்கும் நாம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இலங்கையின் பொருளாதாரநிலை, வாழ்க்கைச்செலவு என்பவற்றின் போக்குக்கேற்பப் பல்கலைக்கழக மாணவர்களும் நிதிக்கஷ்டங்களினால் இடர்ப்பட வேண்டியுள்ளது. தமது சொந்த இடங்களிலிருந்தே பல்கலைக் கழகத்தில் பயிலக்கூடிய வாய்ப்புடையவர்களின் நிலைமை சாதகமானதாகவே காணப்படுகின்றது. ஆனால், இடம் விட்டு இடம்பெயர்ந்து கற்கவேண்டியுள்ள நிலையிலுள்ள மாணவர்கள் பாரிய தாக்கத்துக்கு உள்ளாகிறார்கள். முன்னர் வழங்கப்பட்ட வங்கிக்கடன், மானியஉதவி என்பனவற்றில் காணப்பட்ட

சில குறைபாடுகள் 'மகாபொல புலமைப்பரிசில் திட்டம்' நடைமுறைக்கு வந்த பின்னர் பெருமளவு நீங்கியுள்ளன என்பது உண்மைதான். இருப்பினும், மகாபொல திட்டத்தில் பயன்பெறும் வாய்ப்பு எல்லோர்க்கும் இல்லை. அண்மைக்காலக் கருத்து வெளிப்பாடுகள் பல்கலைக் கழக மாணவர்கள் அனைவர்க்கும் நிதியுதவி வழங்கப்படுமென்று காட்டும் ஒளி நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. எனினும், பிரச்சினை இன்னும் நீங்கவில்லை.

விடுதி வசதியின்மை மாணவர்களைப் பாதிக்கும் இன்னொரு விடயமாகும். சொந்த வீடுகளிலிருந்து பல்கலைக் கழகத்திற்குச் சென்று பயிலக்கூடிய வசதியான நிலையில் இருப்பவர்களைத் தவிர ஏனையோர் இதனால் தாக்குறுகின்றனர். நீண்டதூரம் பயணஞ்செய்ய வேண்டிய நிலை, வசதிகுறைந்த விடுதிகளில் தங்கிக் கற்கவேண்டிய நிலை என்பன மாணவர்களிடையே உடல் - உள தாக்கங்களை ஏற்படுத்திவிடுகின்றன. பல்கலைக் கழக விடுதிகளல்லாத வெளியிடங்களில் தங்கும் மாணவர்கள் அனுபவிக்கும் பல்வேறு கஷ்டங்கள் காரணமாகப் பாரிய மனத் தாக்கங்களுக்கு ஆளாகித் தமது கல்வியைச் செவ்வனே தொடரமுடியாது குழம்பிவிடுகின்றனர். இவ்விடயத்தில் பல்கலைக் கழகங்கள் சிரத்தை காட்டாது இருந்தால் மாணவர்கள் பாதிப்படையும்போது அதனால் ஏற்படும் விளைவுகள் அப்பல்கலைக் கழகங்களையே பலவீனப்படுத்தி விடுகின்றன.

மாணவர்களின் நலன்களில் அக்கறை காட்டாதவிடத்து அந்நிறுவனத்துக்கு எதிராக மாணவர்கள் கிளர்ந்தெழுவது இயல்பேயாகும். இளைஞர் உலகம் எப்போதும் துரிதமான, முன்னேற்றகரமான மாற்றங்களையே விழைகின்றது. அவர்களது கருத்தில் அநீதியெனக் காணப்படும் ஒரு செயல் / நிலைமை / நிறுவனம் என்பவற்றுக்கெதிராக அவர்கள் புரட்சி செய்யக் கொதித்தெழுவது இன்றைய உலகில் ஒரு சாதாரண நிகழ்ச்சியாகும்.

தேசிய மட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் சமூக – அரசியல் – பொருளாதாரக் கருத்தேற்புக்கள் பல்கலைக் கழக மாணவரிடையேயும் காலூன்றி விடுகின்றன. அதன் காரணமாகச் சகஜமான நிலைமைக்கு முரணான வன்செயல் ஈடுபாடும் அம்மாணவர்களிடத்தே வளர்ந்து விடுகின்றது. இப்படியான சூழ்நிலை எமது பல்கலைக் கழகங்கள் இன்று பரவலாக எதிர்நோக்கும் அறைகூவலாக அமைகின்றது.

## முதியோர் கல்வி

ஒரு நாட்டின் பல்கலைக் கழகங்களின் கடமை பட்டதாரி, உயர் பட்டதாரி மட்டத்துக் கல்வியை அளிப்பதோடு நின்றுவிடுவதில்லை. அவற்றின் செயற்பாடு அத்திசையில் கூடிய கவனத்தைச் செலுத்துவதாக இருந்தாலும், அவற்றையும் கடந்து செல்ல வேண்டும். நாட்டிலுள்ள முதியோர்களின் அறிவுவளர்ச்சி, தொழில் முன்னேற்றம், ஓய்வுநேரப் பயன்பாடு போன்றவற்றிற்காக முதியோர் கல்விவசதிகள் பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மனிதனை மனிதனுக வாழ வைப்பதற்கு வாழ்நாள் முழுவதும் கல்வி அவசியமாகின்றது. எனவே, இளைஞர்கட்கு மட்டுமன்றி முதியோருக்கும் கல்வி வழங்க ஆவன செய்யப்பட வேண்டும். பள்ளிப்பருவம் தாண்டி தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு அவ்வத் தொழிற்றுறைகளில் சிறந்த பயிற்சியளித்து அவர்களது தொழிற்றுறை வாழ்க்கைகளில் முழுவெற்றி காண்பதற்கு உதவும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பல்கலைக் கழகங்களின் வெளிக்களத்துறைகள், கல்வி விரிவாக்கச் சேவைகள் என்பன செம்மையாக அமைக்கப்பட்டுச் செயற்படச் செய்யலாம். தொழிலாளர் கல்விநிறுவனம் போன்ற முயற்சிகள் இத்தொடர்பில் குறிப்பிடக்கூடியன. இத்தகைய முதியோர் கல்வி சிறந்த பயனளிப்பதாயின் முழுநேரக் கல்வியைப் பயன்படுத்தக்கூடியவர்களுக்கு முழுநேரமாகவும், ஏனையோர்க்குப் பகுதிநேரமாக அல்லது அஞ்சல் மூலமாகவும் அளிக்கப்பட வேண்டும். எமது பல்கலைக் கழகங்கள் இதற்கேற்ப ஒழுங்கமைக்கப்படவில்லை என்ற குறையை மறந்துவிடமுடியாது.

## அறிவியலாளர்களின் பொறுப்பு

தொகுத்துப் பார்க்குமிடத்து இன்றைய காலகட்டத்தில் எமது பல்கலைக் கழகங்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ள பிரச்சினைகள் பல்வகைப்பட்டன எனக் காணலாம். அவை எல்லாம் எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் ஒரேயளவிலான தாக்கத்தை ஏற்படுத்துவனவாக இல்லாதிருக்கலாம். அப்பிரச்சினைகளின் இயல்பு, தாக்கம் என்பன இடத்துக்கிடம் வேறுபடலாம். அவ்வேறுபாட்டுக்குக் காரணம் சூழல்களிலுள்ள வேறுபாடுகளே எனக் கொள்வது தவறுகாது. சில சந்தர்ப்பங்களில் அப்பிரச்சினைகளின் மூலவேர் பல்கலைக் கழகங்களுக்கும் புறத்தே காணப்படலாம். அக்கண்ணேட்டத்தில் பார்ப்பின், அத்தகைய பிரச்சினைகளையொட்டிப் பல்கலைக் கழகங்கள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்றும் சிலர் கூறலாம். ஆனால், அவற்றின் தாக்கம் எம்மிடையேயும் ஏற்படுகின்றது என்பதை எவரும் மறைக்க முடியாது. அதை உணர்ந்து அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நாம் எல்லோரும் எமது பங்களிப்பினைச் செய்தல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகளையொட்டிப் பல்கலைக் கழக அறிவியலாளர்கள் பராமுகமாக இருந்துவிட முடியாது. அப்பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு நிர்வாகிகளுக்கு மட்டும் உரியதன்று. பல்கலைக் கழக அறிவியலாளர்களின் பங்கும் காத்திரமானதாகும். இத்தகைய நிலை தொடர்பாக ஒரு பிறநாட்டுப் பல்கலைக் கழக அறிஞர் கூறியிருப்பது எமக்கும் பொருந்தும். ''ஆட்சி அமைப்பின் ஒழுங்கினையும் உயிர்த்துடிப்பையும் அரித்துவிடுவது என்னவெனில் அதனை எதிர்நோக்கும் பிரச்சினைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள அறிவியலாளர்கள் காட்டும் தயக்கமாகும்'' என்பது அக்கருத்து.[17] இப்பங்களிப்பு முழுமையான பொறுப்புணர்ச்சியோடு மேற்கொள்ளப்படாவிட்டால் எதிர்காலம் எம்மைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதைத் தவிர்க்கமுடியாது.

## உசாவியவை


1. H. Tristram (Ed.) The Idea of the Liberal Education (London: George G. Harrap & Co. Ltd., 1952), pp. 29-34.
2. See, Peter Scott, The Crisis of the University (London: Croom Helm, 1984)
3. K. Indrapala, "Introductory Address", Ootru – Role of the University in our changing Society, Proceedings of the Seminar held on September 20, 1980, (Jointly sponsored by the Ootru organisation and the South Asian studies Seminar, University of Jaffna), p. 2.
4. Quoted in Anne Corbett, Much to do about Education (London: Council for Educational advance, 1968), pp. 19-20.
5. ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் பிரகடனம், *1948*, பிரிவு *26.1*.
6. Ivor Jennings, Students guide to University Education in Ceylon (Colombo: University of Ceylon, 1948). p. 20.
7. See, C. R. de Silva, "The politics of University Admission", Sri Lanka Journal of Social studies, Vol. I, No. 2, 1976.
8. *பல்கலைக் கழக மானியங்கள்* ஆணைக்குழு, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முதலாம் ஆண்டறிக்கை *(கொழும்பு: பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, 1979), ப. 60.*
9. *ப. சந்திரசேகரம்,* கல்வித்தத்துவம் *(யாழ்ப்பாணம்: கூட்டுறவுத்தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம், 1975), ப. 206.*
10. K. Indrapala, Op. cit., p. 3.
11. Ibid.
12. V. Arumugam, A Comparative Study of Language Policies and Problems in Ceylon and India since Independence, Unpublished M. Phil. dissertation, University of London, 1973, pp. 156-160.
13. Ibid. p. 161
14. Report of the Committee of Inquiry into the teaching of English, S. P. v of 1960, p. 7.
15. N. Balakrishnan, "The Social Sciences in the University", Oortru – Role of the University in our changing society, op. cit., p. 13.
16. S. R. Dongerkerry, "A history of the University of Bombay", University of Bombay, p. 192, quoted in B. N. Sinha, University teachers and their problems (New Delhi: Puja publications, 1982) p. 1
17. Amrik Singh, "The University in India", in Michael D. Stephens & Gordon W. Roderick (Eds.) Universities for a changing world. (London: David & Charles, 1975), p. 82.